விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்: நான்கு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 சித்திரை 26 செவ்வாய்க்கிழமை (09.05.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 141

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.


ராம்கோ சீமெந்து

## தமிழ் மக்கள் மீதான

# படுகொலைகள் நிறுத்தப்படும்வரை

# பேச்சுக்குச் செல்லப் போவதில்லை

## அன்ரன் பாலசிங்கம் அறிவிப்பு



**அரச படைகளாலும் துணைப்படைக் குழுக்களாலும் திட்டமிட்ட வகையில் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்படுவது நிறுத்தப் படாது விட்டால் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளப் போவதில்லை என தமிழீழ விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.**

**ரொய்ட்டர் செய்தி ஸ்தாபனத்திற்கு அவர் வழங்கிய நேர்காணலிலேயே இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்;**

தமிழீழ தாயகத்தில் கட்டுக்கடங்காமல் வன்முறைகள் தீவிரமடைந்து; பாதுகாப்பு நிலைவரம் மோசமடைந்து செல்லும் தற்போதைய சூழலில் தென்தமிழீழ தளபதிகளின் போக்குவரத்து ஏற்பாடுகளில் எழுந்துள்ள சர்ச்சையை பேச்சுவார்த்தைகளுக்கான பிரதான தடையாக கருத முடியாது எனக் குறிப்பிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளைப் பொறுத்தவரை போக்குவரத்து ஏற்பாட்டில் எழுந்துள்ள சர்ச்சை அரசாங்கத்தால் சுயமாக தோற்றுவிக்கப்பட்டு சிக்கலான விடயமாக்கப்பட்டுள்ளது. (04 ஆம் பக்கம் பார்க்க)

## சடலங்களை காண முடியவில்லை

### கண்காணிப்புக்குழு தகவல்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி மந்துவிலில் காணாமல் போன எட்டு இளைஞர்களின் சடலங்கள் இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை என இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.

வடமராட்சி கப்பூதிக் கிராமத்தில் கண்டல் காட்டுப் பகுதியில் சடலங்கள் வீசப்பட்டதாக மக்கள் தெரிவித்ததையடுத்து அங்கு சென்ற தாம் சடலம் எதனையும் காணவில்லை என தெரிவித்தனர்.

தென்மராட்சி- வடமராட்சி எல்லையில் கப்பூதிக்கிராமத்திற்கு அருகாமையில் உள்ள கொம்பிமுனை கண்டல் காட்டுப்பகுதியில் இந்தச் சடலங்கள் இருப்பதாக மக்கள் அவதானித்துள்ளனர்.

இதையடுத்து அப் பகுதியில் பெரும் பரபரப்பும் பதற்ற நிலையும் உருவானது. இதனால் அப்பகுதிக்கான வீதிகளை இராணுவத்தினர் மூடிவிட்டனர். கப்பூதிக்கிராமத்தினுள் எவரையும் நுழையவும் இராணுவம் அனுமதிக்கவில்லை.

நேற்றுக் காலை அப்பகுதிக்குச் சென்ற கண்காணிப்புக்குழுவினர் அங்கு சடலங்கள் எதையும் தாம் காணவில்லை என்று அறிவித்துள்ளனர். (04 ஆம் பக்கம் பார்க்க)

## ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டதால் விசாரணைகளை மேற்கொள்ளவில்லை

### பொலிஸ் அத்தியட்சகர் தகவல்

யாழ்.குடாநாட்டில் நேற்று பிறப்பிக்கப்பட்ட ஊரடங்குச் சட்டத்தினால் மந்துவில் பகுதி யில் காணாமல் போன இளைஞர்க ளின் விசாரணைகளை மேற்கொள்ள முடியாமல் போயுள்ளதாக பொலிஸார் தன்னிடம் தெரிவித்ததாக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.கஜேந்திரன் தெரிவித்தார்.

மந்துவில் பகுதியில் காணாமல் போன இளைஞர்களை தேடும் பொருட்டு தமது பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகவே ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்டது என யாழ். மாவட்ட கட்டளைத்தளபதி தெரிவித்தார்;

ஆனால் நேற்று மாலை தன்னை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டதால் அது தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள முடியாமல் போனதாகவும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி கூறியதாக எம்.பி. தெரிவித்தார். இதேவேளை இராணுவத்தின் நிலைகளை பலப்படுத்துவதற்காகவே நேற்று ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப்பட்டதாக கூறப்பட்டது. (ச-5)

## ஊரடங்குச் சட்டத்தினால் குடாநாடு நேற்று ஸ்தம்பிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நேற்று முழுநாளும் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருந்ததால் மக்கள் பல்வேறு வகையான அசௌகரியங்களை எதிர்நோக்கினர்.

நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் நேற்று மாலை 4 மணிவரையும் இராணுவத்தினரால் ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப் பட்டது.

இதன் காரணமாக யாழ்.குடாநாட்டில் அனைத்துப் பிரதேசங்களும் மக்கள் நடமாட்டமின்றி வெறிச்சோடிக் காணப்பட்டது.

மாறாக வீதிகள் தோறும் பெருமளவு பொலிஸாரும்,இராணுவத்தினர் குவிக்கப்பட்டிருந்தனர். ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டமை தெரியாமல் வீதிகளில் நடமாடியவர்கள் நேற்றுக் காலை இராணுவத்தினரால் தடுத்து வைக்கப்பட்டு நீண்ட நேரத்தின் பின்னர் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

எவ்வித முன்னறிவித்தலும் இன்றி ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டு மக்கள்மீது கெடுபிடிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமையானது மக்கள் மத்தியில் கடும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டமை குறித்த செய்திகளை அறிவதற்கு பத்திரிகையின் வருகையை மக்கள் எதிர்பார்த்திருந்த போதிலும் பத்திரிகை விநியோகஸ்தர்கள் இராணுவத்தினரால் திருப்பி அனுப்பப்பட்டதால் பத்திரிகை விநியோகத்திலும் தடங்கல் ஏற்பட்டது. இதேவேளை நேற்று மாலை 4மணியளவில் ஊரடங்கு (04 ஆம் பக்கம் பார்க்க)

## ஏ-9 போக்கு வரத்துக்கள் இன்று முதல் வழமைக்கு

(கொழும்பு)

ஏ-9 வீதியில் ஓமந்தை, முகமாலை மற்றும் உயிலங்குளம், மடு வீதி உட்பட்ட வீதிகள் இன்று காலை 8 மணிக்குத் திறக்கப்படும் என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

பி.பி.சியின் சிங்கள சேவைக்கு அவர் வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.


**யாழ்.குடாநாட்டில் நேற்று நிலவிய அசாதாரண நிலை காரணமாக வலம்புரி இன்று நான்கு பக்கங்களுடன் வெளிவருகின்றது என்பதை வாசகர்களுக்குத் தெரியப்படுத்துகின்றோம். (ஆ-ர்)**

யாழில் நேற்று ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்ட நிலையில் முகமாலை ஊடான போக்குவரத்துக்கள் தடைப்பட்டன. இதே போன்று ஓமந்தை,மடு,உயிலங்குளம் ஆகியவற்றுற்றினுடான போக்கு வரத்துப்பாதைகளும் நேற்று மூடப்பட்டன.

இவ் வீதிகள் மூடப்பட்டது தொடர்பாக பாதுகாப்பு காரணங்களுக்காக கூறமுடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

நேற்று மாலை 4 மணிக்கு இவ் வீதிகள் திறக்கப்பட்டு விட்டதெனவும் எனவே இன்று காலை 6 மணிக்கு அனைத்து வீதிகளும் திறக்கப்பட்டு விடும் எனவும் இராணுவப் பேச்சாளர் (04 ஆம் பக்கம் பார்க்க)

நடுவுநிலை தவறா நன்னெறி



ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாஷி நேற்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்துக் கலந்துரையாடினார். எனினும் இச் சந்திப்பில் பேசப்பட்ட விடயங்கள் குறித்து தகவல் எதுவும் தெரியவில்லை.

# மகோற்சவம்

(சுழிபுரம்)

மூளாய் வதிரன்புலோ ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் கடந்த 01.05. 2006 திங்கட்கிழமை கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து திருவிழா 13 தினங்கள் நடைபெறும். எதிர்வரும் 11 திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

தினமும் மாலை 7 மணி முதல் 8 மணிவரை தெய்வீக இசை அரங்கும் இடம்பெறுகின்றது.

(ச-5)



வாழும் கலை குருஜி ரவிசங்கர்அவர்களின் ஜனன தினத்தினை முன்னிட்டு கடந்த 7 ஆம் திகதி நல்லூரிலுள்ள மாங்கோஸ் உணவகக் கட்டடத்தில் யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கிக்கு குருதிக் கொடை வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் 33 வாழும் கலை உறுப்பினர்கள் குருதிக் கொடை வழங்கினர். (படம்:-யதார்த்திகன்)

# தமிழகத் தேர்தல் வாக்களிப்பு முடிந்தது முடிவுகள் 11 ஆம் திகதி வெளியாகும்

தமிழகச் சட்டமன்றுக்கு நேற்று நடந்த தேர்தலில் சுமார் 65 வீதத்தினர் வாக்களித்திருப்பதாக தமிழக தலைமைத் தேர்தல் ஆணையாளர் நரேஷ் குப்தா தெரிவித்துள்ளார்.

மாநில மட்டத்தில் மதுரையில் அதிகப்படியாக 73 வீத வாக்களிப்பு இடம் பெற்றதாகவும் தேனி மாவட்டத்தில் குறைந்தபட்சமாக 57 வீதம் பதிவானதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஆங்காங்கே இடம்பெற்ற சிறிய வன்முறைகளைத் தவிர பெரிய அளவிலான தேர்தல் வன்முறைகள் எதுவும் நடக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். ஆண்டிப்பட்டி உட்பட்ட வேறு சில இடங்களில் சிறிய வன்செயல்கள் குறித்து முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மே மாதம் 11 ஆம் திகதி வாக்கு எண்ணும் பணிகள் ஆரம்பமாகும் என்றும் அவர் கூறினார். (ச-5)

# வவுனியாவை விட்டு வெளியேற ஐந்து பெண்களுக்கு அவகாசம்

(வவுனியா)

சட்டவிரோதமான செயல்களில் ஈடுபட்டு வரும் ஐந்து பெண்களை உடனடியாக வவுனியாவிலிருந்து வெளியேற வேண்டும் என்று கலாசாரம் பேணும் அமைப்பு சுவரொட்டி மூலம் எச்சரித்துள்ளது.

போதைப் பொருள் மற்றும் கசிப்பு விற்பனையில் அப்பெண்கள் ஈடுபட்டு வருவதாகவும் பாலியல் போன்ற செயல்களில் ஈடுபட்டு வருவதாகவும் அந்த சுவரொட்டியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஐந்து பெண்களும் வவுனியா மாவட்டத்தை விட்டு வெளியேற வேண்டும் என்றும் வெளியேறாத நிலையில் கடுமையான தண்டனை வழங்கப்படும் என்றும் அச்சுவரொட்டியில் எச்சரிக்கப்பட்டுள்ளது.

(ச)



தி.மு.க. தலைவர் கருணாநிதியும் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவும் வாக்களிப்பதைக் காணலாம்.

# நீர்வேலி இளைஞனின் கொலைக்கு எல்லாளன் படை உரிமை கோரியது

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலிப் பகுதியில் நீர்வேலி கரந்தனைச் சேர்ந்த சாந்தன் என்பவர் நேற்று முன்தினம் சுட்டுக் கொல்லப்பட்டமைக்கு யாழ். மாவட்ட எல்லாளன்படை உரிமை கோரியுள்ளது.

இந் நபர் இராணுவப் புலனாய்வுத் துறையினருடனும் துணை இராணுவக் குழுவினருடனும் இணைந்து தேச விரோதச் செயல்களில் ஈடுபட் டு வந்தவராவார்.

பல்வேறு சமூகச் விரோதச் செயல்களிலும் ஈடுபட்டு வந்தார். பலதடவைகள் இவருக்கு எச்சரிக்கை விடுத்து வந்திருந்தோம். எச்சரிக்கையையும் மீறி தமிழ்த் தேசியத்துக்கெதிரான தொடர் துரோகச் செயல்களில் ஈடுபட்டு வந்தார்.

இந்நிலையில் இவருக்கு எமது இறுதித் தண்டனை வழங்கப்பட்டுள்ளது என்று எல்லாளன் படை துண்டுப் பிரசுரத்தில் வெளியிட்டு உள்ளது. (ச-5)

# இராசி பலன்

**09.05.2006**
**(சித்திரை 26, செவ்வாய்க்கிழமை)**
**ஏகாதசி காலை 7.56மணிவரை**
**உத்தராடம் பற்பகல் 03.04மணிவரை**
**இராகுகாலம் 02.54-04.24**
**சுபநேரம் 10.24-11.54 மணிவரை**
**அமிர்த சித்தம்**

| | |
|---|---|
| மேடம் | சயனசுகக்குறைவு, பொருள் விரயம், காரிய தாமதம், உடல்நலக்குறைவு. |
| இடபம் | எடுதத கருமங்கள் கைகூடும், போசன சுகம், தெய்வ-தரிசனம், நல்ல தகவல். |
| மிதுனம் | அதிகாரம், நல்ல முயற்சி, தெய்வ தரிசனம், விருந்துபசாரம். |
| கடகம் | புதிய திட்டமிடல், சரீரப்பிரயாசை, ஆழ்ந்த சிந்தை, கட்டுப்பாடு. |
| சிங்கம் | வீண்பகை, காரியதடங்கல், பணக் குறைவு, தொழில் நன்மை. |
| கன்னி | சென்ற இடத்தில் செல்வாக்கு, போசன சுகம், தொழில்நன்மை, தெய்வசிந்தை. |
| துலாம் | சுபநிகழ்வு, எடுத்த காரியம் கைகூடும், தேக நலன், செய்தொழில் விருத்தி. |
| விருச்சிகம் | வியாபார நன்மை, புத்திரரால் கவலை, முயற்சி தாமதம், மாதர் நட்பு. |
| தனுசு | எடுத்தகாரியம் தாமதம், பணவிரயம், தெய்வசிந்தை, வேலைச்சுமை. |
| மகரம் | கூட்டுமுயற்சி, பிரயாணம், நல்ல செய்தி, உஷ்ணநிலை. |
| கும்பம் | விவாதம், பணவிரயம், எடுத்தகாரியம் தாமதம், போசன சுகக்குறைவு. |
| மீனம் | பெரியோர் உதவி, காரிய சிந்தை, போசன சுகம், அதிகாரம். |

- வளவன்

# சடலம் மீட்பு

(மட்டக்களப்பு)

ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட புன்னக்குடா கடற்கரையோ ரமாக ஆணின் சடலம் ஒன்று நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளது.

சடலம் ஏறாவூர் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. களுவாங்கேணியைச் சேர்ந்த சின்னத்தம்பி சிவலிங்கம் (வயது-43) என அடையாளம் காணப்பட் டுள்ளார்.

இவர் கடந்த நான்கு நாட்களாக காணாமல் போனவர் எனவும்தெரி ய வருகின்றது.

(ச-5)

# பிச்சைக்காரர்களைக் கண்காணிக்க கொழும்பில் விசேட பொலிஸ் குழு

(கொழும்பு)

கொழும்பில் வீதித் தடைகள் உள்ள இடங்களில் பிச்சை எடுப்போரைக் கண்காணிக்க சிறப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

பிச்சைக்காரர்கள் போல் தமிழீழ விடுதலைப்புலிகள் செயற்பட்டு முக்கிய பிரமுகர்களை கொலை செய்யவுள்ளதாக எமக்குத் தகவல் கிடைத்துள்ளது.

கொழும்பு நகரின் 40 முக்கியமான வீதித் தடைகள் உள்ள இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. நகரின் பெரும்பாலான பிச்சைக்காரர்கள் அடையாள அட்டை வைத்திருப்பதில்லை.

வீதித்தடைகள் கீழ் பிச்சை எடுக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனைக்கண்காணிக்க சிறப்புப் பொலிஸ் குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

கொழும்பு நகரின் அனைத்து ஓட்டோக்களிலும் சிறப்பு சுவரொட்டி ஒன்று ஒட்டப்பட்டுள்ளது. 17 பொலிஸ் நிலையங்கள் இத்தகைய பணிகளை மேற்கொண்டுள்ளன.

கொழும்பு நகரில் இதுவரையில் 8 ஆயிரத்து 441 முச்சக்கர வாகனங்களில் இத்தகைய சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

மேலும் 9 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாகனங்களில் இச் சுவரொட்டிகள் ஒட்டப்பட வேண்டியுள்ளது.

கொழும்பு நகரில் மேற்கொள்ளப்படுகின்ற பல குற்றச் செயல்கள் முச்சக்கர வாகனங்கள் மூலமாக நடத்தப்படுவதால் இத்தகைய ஒரு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது என்கிறார் சந்திரா பெர்னாண்டோ. (ச-5)

# அழைப்புக் கட்டளை

*இல.16 பிரிவு 55 (1)*

யாழ்ப்பாணம் என்னுமிடத்திலுள்ள/மாவட்ட நீதிமன்றத்தில்

முத்துவேலு வைத்திலிங்கம்,
631,முஸ்லிம் கல்லூரி வீதி,
ஓட்டுமடம்,
யாழ்ப்பாணம்.

வழக்கு இல. D/625 எதிர் வழக்காளி

வைத்திலிங்கம் பெண் கந்தையா -மகள்,
யமுனா , மே/பா கமல் கடை,
நேசன் குடியிருப்பு, 1ம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.

மேலே பெயர் குறிப்பிட்டுள்ள எதிராளி/ எதிராளிக்கு

மேலே பெயர் குறிப்பிட்டுள்ள வழக்காளி தமக்கும் உமக்குமிடையேயுள்ள திருமணத்தை ரத்துச் செய்வதற்காக இந் நீதிமன்றத்தில் உமக்கு எதிராக வழக்குத் தொடர்ந்துள்ளாராதலினால் அதற்கு உமது மறுமொழி ஏதேனும் இருப்பின், 2006 ஆம் ஆண்டு 05 மாதம் 18 ஆந் நாளன்று அல்லது அதன் முன்னர் நீதிமன்றத்திற்கோப்பிடும்படி இத்தால் நீவிர் தேவைப்படுத்தப்படுவதோடு சொல்லப்பட்ட தேதியன்று அல்லது அதன் முன்னர் நீவிர் மறுமொழி கோப்பிடத்தவறும் சந்தர்ப்பத்தில் வழக்கானது மறுகட்சிக்காரரில்லாமலே மேற்கொண்டு நடாத்தப்பட்டு விளங்கப்படுமென அறிந்து கொள்ளுமாறு நீவிர் இத்தால் தேவைப்படுத்தவும்படுகின்றீர்.

பதிவுபெற்ற தரணி மூலம் நீர் தோன்றாவிடில், சட்டமுறையான எல்லா அறிவித்தல்களும் சேர்ப்பிக்கப்படக்கூடிய முகவரியொன்றைக் கூறும் விபரக் குறிப்பொன்றைக் கோப்பிடுமாறு நீவிர் மேலும் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

வரைவு,
பவானி சற்குணராசா,
வழக்காளியின் சட்டத்தரணி.

நீதிமன்றக் கட்டளைப்படி,
து.சிறீமோகன்,
பதிவாளர்.
நீதிமன்றம் யாழ்ப்பாணம்

*குறிப்பு:-* விளக்கத் தேதியை நிர்ணயிப்பதற்காக பகிரங்க நீதிமன்றத்தில் இவ் வழக்கு ஏற்படும் தேதி பற்றிய அறிவித்தலை நீவிர் பெற விரும்பினால் பதிவு செய்யப்பட்ட முகவரியொன்றை இந் நீதிமன்றப் பதிவாளரிடம் கொடுத்துதவுமாறும் பதிவஞ்சல் மூலம் அனுப்பி வைப்பதற்கும் செலவை மேவுவதற்குத் தேவைப்படும் முத்திரைகளைக் கொடுக்குமாறும், 80-ம் பிரிவின் மூலம் நீவிர் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

து.சிறீமோகன்
கையொப்பம், பதிவாளர்.
2006 ஆண்டு 05 மாதம் 04 ஆந் நாளாகிய இன்று.

பிறரைச் சீர் திருத்தும் கடமையைவிடத் தன்னைச் சீர்திருத்துவதே முதற்கடமை.
-பெர்னார்ட்ஷா

வலம்புரி

# நோர்வேயின் முடிபு என்ன?

2002 ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட யுத்த நிறுத்த உடன்படிக்கை இன்னமும் நடைமுறையில் இருக்கின்றதா? இதுவே தற்பொழுது இன, மத, மொழி வேறுபாடற்ற கேள்வியாக நாட்டு மக்களிடையே எழுந்துள்ளது.

யுத்தநிறுத்த உடன்படிக்கையில் கைச்சாத் திட்ட அரசிடமும் விடுதலைப்புலிகளிடமும் இந்தக் கேள்வியைக் கேட்பதற்கப்பால் சமாதான அனுசரணைப் பணியில் ஈடுபட்டிருக்கும் நோர்வேயிடம் கேட்பதே சாலப் பொருத்துடையதாகும்.

எனினும் கடந்த ஐந்து வருடங்களாக சமாதான அனுசரணைப்பணியில் தன்னை ஈடுபடுத்தி வரும் நோர்வே ஒருபோதும் வெட்டொன்று துண்டு இரண்டாக பதிலளித்தது கிடையாது.

அனுசரணைப்பணியில் தனது நாட்டிற்கு எவ்வித இழுக்கும் வந்துவிடக்கூடாது என்பதிலேயே நோர்வே கண்ணும் கருத்துமாக இருக்கின்றது.

இது அந் நாட்டைப் பொறுத்தவரை ஏற்புடையதாகவிருக்கலாம். ஆனால் இலங்கை மக்களைப் பொறுத்தவரை அது ஒருபோதும் ஏற்புடையதல்ல.

ஏனெனில், நோர்வேயின் அனுசரணைப் பணி தொடர்ந்தும் இடம்பெறுவதாகவே மக்கள் கருதுகின்றனர்.இக் கருத்து நிலையே சர்வதேச சமூகத்திடமும் இருக்கின்றது.

இந் நிலையில் நாட்டில் யுத்தத்திற்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. குறிப்பாக திருகோணமலையில் இடம்பெற்ற விமானத் தாக்குதல், புத்தூர், நெல்லியடி உட்பட யாழ்ப்பாணத்தில் நடந்த படுகொலைகள் எல்லாம் யுத்தநிறுத்தம் நடைமுறையில் இல்லை என்ற செய்தியையே பறைசாற்றுகின்றது.

இவ்வாறு யுத்தநிறுத்த மீறல்கள் தாராளமாக நடக்கின்ற போதிலும் சமாதான அனுசரணைப் பணியில் ஈடுபட்டுள்ள நோர்வே மௌனமாக இருப்பது அதிர்ச்சியைத் தருகின்றது.

ஐயா! அப்பாவி மக்களின் உயிர் காவு கொள்ளப்படுகின்றது. இராணுவக் கட்டுப்பாடு எனக் கூறிக் கொண்டு யாழ்.குடாநாடு முழுவதும் படையினரைக் குவித்துவைத்து விட்டு நடைமுறைகள் பற்றி எதுவும் தெரியாது என அரசு கூறுவது நியாயமானதா?

யாழ்ப்பாணத்தில் நடக்கின்ற கொலைகள் குறித்து படையினருக்கு எதுவும் தெரியவில்லையாயின், யாழ்ப்பாணத்தை இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியெனக் கூறிக்கொள்வது எவ்வகையில் பொருத்தமானது?

இவ்வாறான கேள்விகள் சதா இழப்பைச் சந்தித்து வரும் தமிழ் மக்களின் இதயத் துடிப்பாக ஒலிக்கின்றது.

எனவே இது விடயத்தில் தமிழ் மக்களுக்குப் பதிலளிக்கும் பொறுப்பு நோர்வேயினுடையதாகும்.

அவ்வகையில்,

- யுத்தநிறுத்த உடன்படிக்கை அமுலில் இருக்கின்றதா? இல்லையா?
- அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சு சாத்தியமானதா?
- நோர்வேயின் அனுசரண்ணப் பணி தொடருமா?

மேற்போந்த மூன்று கேள்விகளுக்கும் மழுப்பலற்ற பதிலை நோர்வே தரவேண்டும். இந்த மூன்று கேள்விகளுக்குமான பதிலைத் தருவது நோர்வேக்குக் கடினமானதாகவிருக்குமாயின் நோர்வே அனுசரணைப்பணியை தொடர்ந்து மேற்கொள்ள மாட்டாது என்ற பதில் போதுமானதாகவிருக்கும்.

# இலங்கையில் அமைதி நிலை ஏற்படுவதற்கு சர்வதேசம் உடனடியாக தலையிட வேண்டும்

## யாழ்.ஆயர் அவசர வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் யுத்தம் ஏற்படுவதைத் தவிர்க்க சர்வதேச சமூகம் தலையிட வேண்டும் என்று யாழ்.ஆயர் தோமஸ் சவுந்திரநாயகம் அடிகளார் வலியுறுத்தியுள்ளார். வடக்குக் கிழக்கிலும் தென்னிலங்கையிலும் தொடரும் படுகொலைகள் மற்றும் கடத்தல் சம்பவங்களால் தமிழ் மக்கள் பாதுகாப்பற்ற நிலையில் அச்சமுடன் உள்ளனர்.

எந் நேரத்திலும் பாரிய யுத்தம் வெடிக்கக் கூடும் என்ற அச்சத்தில் மக்கள் உள்ளனர். இந்த யுத்த சூழ்நிலையைத் தவிர்க்க சர்வதேச சமூகம் தலையிட்டு இருதரப்பினருக்கும் அழுத்தம் கொடுக்க வேண்டும்.

குறிப்பாக யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த அழுத்தம் கொடுக்க வேண்டும். யாழ்ப்பாணத்தில் தேடுதல் நடவடிக்கையின் போது இராணுவத்தினரால் பல தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். மனித உரிமைகள் அப்பட்டமாக மீறப்படுகின்றன. இந்த ஒப்பு கொள்ள முடியாத நிலை குறித்து சர்வதேச சமூகம் வெறும் பார்வையாளராக மட்டுமே இருக்கக் கூடாது.

ரணில் ஆட்சிக் காலத்தில் நோர்வே அனுசரணையாளர்களுடன் சர்வதேச சமூகம் தீவிரமாக இணைந்து செயற்பட்டது.நான்கு ஆண்டு கால அமைதி ஏற்பட்டது.

ரணில் ஆட்சிக்குப் பின்னர் ஜனாதிபதி தேர்தல் முதல் வன்முறைகள் மீண்டும் தலைதூக்கியுள்ளன. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவான போது அமைதிக்காக சிறு நம்பிக்கையிருந்தது. அதன் பின்னரான வன்முறைகளால் அது மூழ்கடிக்கப்பட்டு விட்டது.

வடக்குக் கிழக்கில் இராணுவத்தினருக்கும் அதனுடன் சேர்ந்தியங்கும் துணை இராணுவக் குழுவினரும் வன்முறைகளை அதிகப்படுத்தியுள்ளனர்.

கிளைமோர்த் தாக்குதலினால் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். இரு தரப்பும் பேச்சுக்கு செல்ல வேண்டும் என்கிற அழுத்தத்திற்கு அப்பால் சர்வதேச சமூகம் செயற்பட வேண்டும் என யாழ்.ஆயர் மேலும் தெரிவித்தார். (சு)

# நாகர்கோவில் முன்னரங்க நிலைகளில் இராணுவத்தினர் குவிக்கப்படுகின்றனர்

## விடுதலைப்புலிகள் குற்றச்சாட்டு

பல நூற்றுக்கணக்கான படையினர் தங்களது கனரக ஆயுதங்கள் மற்றும் வாகனங்கள் சகிதம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை நள்ளிரவு 12 மணியிலிருந்து நேற்று மதியம் 12 மணிவரை தொடர்ச்சியாக பலாலி இராணுவ முகாமிலிருந்து மணற்காடு, குடத்தனை, நாகர்கோவில்,வடமராட்சி கிழக்குப் போன்ற பகுதிகளின் முன்னரங்க நிலைகளுக்கு நகர்ந்துள்ளன என விடுதலைப்புலிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

அச்சுவேலிச் சந்தியூடாக யாழ்.பருத்தித்துறை வீதியை அடைந்து நாகர் கோவிலுக்கு ஒருபகுதி படையினர் நகர்ந்து செல்லும் அதேவேளை நெல்லியடி ஊடாக வல்லிபுரக் கோவிலையடைந்து அங்கிருந்து மருதங்கேணி வீதியூடாக மந்திகை சென்று நாகர் கோவில் பிரதேசங்களை இன்னும் ஒரு தொகுதி படைகள் சென்றடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பிறிதொரு படைப் பிரிவு வல்லைச் சந்தியிலிருந்து மந்தான்ஆயன் சந்தி மற்றும் முள்ளி பகுதிகளூடாகச் சென்று வல்லிபுரம் சந்தியை அடைந்ததாகவும் அங்கிருந்து மருதங்கேணி வீதியால் நாகர் கோவிலைச் சென்றடைந்ததாகவும் கூறப்பட்டது. (சு-5)

# இராணுவத்தின் தாக்குதல்களை க.கா.குழுவினர் கண்டு கொள்ளவில்லை

## எழிலன் குற்றச்சாட்டு

(திருகோணமலை)

விடுதலைப்புலிகளின் முன்னரங்கப் பாதுகாப்பு நிலைகளை இராணுவம் இனிமேலும் தாக்க முயற்சித்தால் இராணுவ நிலைகளைத் தாக்குவதற்கு விடுதலைப்புலிகள் தள்ளப்படுவார்கள் என்று திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் காட்டமான எச்சரிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

துணைப்படைகளை ஏவி விடுதலைப்புலிகளின் நிலைகள் மீது குறிப்பாக கட்டைப்பறிச்சான் முன்னரங்க நிலை மீது தாக்குதல் நடத்தப்பட்டால் இராணுவத்தின் கட்டைப் பறிச்சான் முகாம் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்துவார்கள் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

கட்டைப்பறிச்சான் முகாம் மீது படையினரின் தாக்குதல் குறித்து சர்வதேச கண்காணிப்புக் குழுவிடம் தகவல் தெரிவித்தும் அவர்கள் எதுவித நடவடிக்கைகளையோ ஆய்வையோ மேற்கொள்ளவில்லை.

இந்நிலையில் மீண்டும் துணைப்படைகளை ஏவி தாக்குதல் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவித்த எழிலன் தொடர்ந்தும் துணைப்படைகளை வைத்துக் கொண்டு இராணுவம் நடத்தும் நிழல் யுத்தத்தை விடுதலைப்புலிகள் பொறுத்துக்கொள்ள மாட்டார்கள் என்றும் தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை நள்ளிரவுக்குப் பின்னர் இறால்குழி பகுதியிலுள்ள விடுதலைப்புலிகளின் முகாம் மீது தாக்குதல் முயற்சி ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. இருப்பினும் இத் தாக்குதல் முறியடிக்கப்பட்டுள்ளது.

இது குறித்தும் கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டதும் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கண்காணிப்புக் குழுவினர் அப்பகுதிக்கு வந்து இந்த முறைப்பாடு குறித்து ஆராய்ந்துள்ளனர்என்றும் எழிலன் குறிப்பிட்டார். (சு-5)

# அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் மக்களை மீளக் குடியமர்த்த உயர் நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

வலிகாமம் வடக்கு அதியுயர் பாதுகாப்பு வலயத்திலிருந்து வெளியேற்றப்பட்ட மக்களை மீண்டும் அவர்களின் சொந்த நிலங்களில் மீளக் குடியமர்த்துமாறு உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராஜாவும் 4 விவசாயிகளும் தாக்கல் செய்திருந்த அடிப்படை உரிமை மீறல் மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொண்ட போதே இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டது.


அந்தத் தீர்ப்பிற்கு அமைய ஆயிரத்து 456 குடும்பங்கள் மீளக் குடியமர்த்தப்படும் போது பாதுகாப்புப் படையினரது ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வது அவசியம் என பிரதம நீதியரசர் சரத் என். சில்வா தெரிவித்துள்ளார்.

குறித்த மீளக் குடியமர்த்தலின் போது அரசாங்கத்தின் நிவாரண உதவியின் கீழ் நலம்புரி நிலையங்களில் வாழும் மக்களிற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் எனவும் யாழ்.அரச அதிபருக்கு பிரதம நீதியரசர் உத்தரவு பிறப்பித்தார்.

இதேவேளை உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள நிலப் பரப்புத் தொடர்பாக பாதுகாப்புத் தரப்பினரின் அறிக்கையை எதிர்வரும் ஜூலை மாதம் 24 ஆம் திகதி சமர்ப்பிக்குமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது. (சு-5)

### தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்



வியாபாரிகள் இருப்புத் திட்டம் பார்ப்பது போல் நம்மிடத்தில் என்ன என்ன நல்ல குணங்கள் இருக்கின்றன என்றும் எவ்வளவு தூரம் ஆன் மீகத்தில் முன்னேறியிருக்கிறோம் என்றும் சோதித்துப்பார்.

சுவாமி விவேகானந்தர்

# இலங்கை நிலைவரம் குறித்து இந்தியாவிற்கு மங்கள விளக்கம்

இந்தியாவுக்கு மூன்று நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சரமவீர நேற்று இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஷி, வெளியுறவுத்துறை இணையமைச்சர் ஆனந்சர்மா, வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கமல்நாத் மற்றும் அரசாங்கம், மாநிலங்கள் சபை எதிர்க்கட்சித் தலைவர் யஸ்வந் சிங் ஆகியோர் உட்பட பல தலைவர்களுடன் சந்தித்துப் பேசியுள்ளார்.

மங்கள சமரவீர இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குடன் ஒரு மணிநேரத்திற்கு மேலாக இலங்கையில் தற்போதைய நிலைவரங்கள் தொடர்பாக சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இந்த சந்திப்பில் இராணுவத் தலைமையகத்தில் நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதல் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட பதற்றமான சூழ்நிலைகள் குறித்து மங்கள சமரவீர மன்மோகன் சிங்கிற்கு விபரித்துள்ளார்.

இதன்போது தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகள் மீது வான் படைத்தாக்குதல் நடத்தவேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டது ஏன் என்பது குறித்தும் வெளிவிவகார அமைச்சர் இந்தியப் பிரதமரிடம் விபரித்திருப்பதாக கூறப்படுகிறது.

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்தியா தொடர்ந்து அனைத்து வழிகளிலும் உதவவேண்டுமென இந்தியப் பிரதமரிடம் சமரவீர கோரியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்திற்கு போட்டியிடும் ஜயந்த தனபாலவிற்கு இந்தியா ஆதரவு வழங்கவேண்டும் எனவும் வெளியுறவு அமைச்சர் கேட்டுள்ளார்.

இதேவேளை அனைத்துத் தரப்பினரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய சுமுகமான அரசியல் தீர்வொன்றை காணவேண்டுமென இந்தியா வலியுறுத்தியுள்ளது.

இலங்கையில் மீண்டுமொருயுத்தம் ஏற்படாமல் இரு தரப்பினரும் சுமுகமான தீர்விற்கு வரவேண்டுமென வெளிவிவகார அமைச்சர் மங்கள சமர வீரவிற்கு இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார். (ச-05)



# புலிகள்-கருணா அணி மூதூரில் நேரடி மோதல்

(திருகோணமலை)

திருகோணமலை மூதூர் பகுதியை அண்மித்த கட்டைபறிச்சான், இறால்குழி மற்றும் சம்பூர் ஆகிய இடங்களில் உள்ள விடுதலைப்புலிகளின் சிறிய முகாம்களை தாம் தாக்கியதாக கருணா அணி தெரிவித்துள்ளது.

அந்தத் தாக்குதலில் விடுதலைப்புலிகளில் 12 பேர் கொல்லப்பட்டதாக அப்பகுதி மக்களின் தகவல் மூலம் அறியக்கிடைத்தது.

அவ் வகையில் தூயவன் என்பவர் பி.பி.சிக்குத் தெரிவிக்கையில், ஆனால் இந்தத் தாக்குதலை இராணுவமும் அதனுடன் சேர்ந்தியங்கும் துணைப்படையினரும் இணைந்து நடத்தியதாக குற்றஞ்சாட்டும் விடுதலைப் புலிகள் இந்த மோதலில் தமது தரப்பில் எவரும் இறக்கவில்லை என்று கூறினர்.

இந்தத்தாக்குதலை தாம் முறியடித்து விட்டதாகவும் தாக்க வந்தவர்களின் ஆயுதங்களைக் கைப்பற்றியதாகவும் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் கூறியுள்ளார்.

இந்தத் தாக்குதலில் இராணுவத்தினர் சம்பந்தப்பட்டதாக கூறப்படுவதை இலங்கை இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க மறுத்துள்ளார்.

(ச-5)

# இரத்தத்திற்கு தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் இரத்த வங்கியில் இரத்ததிற்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக இரத்தவங்கிக்குப் பொறுப்பான அதிகாரி தெரிவித்துள்ளார்.

தற்போது குடாநாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையினையடுத்து குருதிக் கொடைசெய்பவர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது.

இதனால் அனைத்து வகையிலான இரத்தத்திற்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இரத்ததானம் செய்யவிரும்பும் கொடையாளர்கள் நேரடியாக வந்து வழங்க முடியும் அல்லது கொடையாளர்கள் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த பின் தமக்கு 222 3063 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தெரியப்படுத்தினால் நேரடியாக வந்து பெறப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (ச-12)

## ஊரடங்குச் ...

தளர்த்தப்பட்டதையடுத்து மக்கள் கடைகளை நோக்கி விரைந்தனர்.

அத்தியாவசியமான பொருட்களை கொள்வனவு செய்தனர். எனினும் சில பொருட்களுக்கு தட்டுபாடு ஏற்பட்டது. இது இவ்வாறு இருக்க மாலை 6 மணிக்குப்பின்னர் வீதிகளில் குவிக்கப்பட்ட இராணுவத்தினர் மக்கள் பயணத்தினை கட்டுப்படுத்தினர். (ச-15)

## ஏ-9 போக்கு...

தெரிவித்தார்.

இதேவேளை இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புகுழு ஊடாக விடுதலைப்புலிகளின் சமாதான செயலகத்திற்கு அரச சமாதான செயலகம் விடுத்துள்ள வேண்டுகோளில் யாழ்.மக்கள் ஆர்ப்பாட்டங்களிலும் எழுச்சி நிகழ்வுகளிலும் ஈடுபடுவதை விடுதலைப்புலிகள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தால் நேற்று மூடப்பட்ட அனைத்து வீதிகளும் மீண்டும் திறக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டதாக கூறப்பட்டது. (ச-05)

## சடலங்களை...

முன்னதாக கண்காணிப்புக்குழுவினர் அப்பகுதிக்குச் செல்ல ஆயத்தமாகிய போது அப்பகுதி மக்களில் சிலர் தாங்களும் அங்கு வர விரும்புவதாக தெரிவித்த போதிலும்கண்காணிப்புக்குழுவினர் இதற்கு மறுப்புத் தெரிவித்தாக கூறப்பட்டது.

மக்கள் கடும் குழப்பமடைந் நிலையில் காணப்பட்டதால் இறுதியில் ஒருவரை மட்டும் தங்களுடன் அழைத்துச் செல்ல இணங்கியிருந்தனர்.

பின்னர் உடல் காணப்பட்ட பகுதிக்குச் சென்ற கண்காணிப்புக்குழுவினர் அப்பகுதியில் எந்தத் தடயங்களும் காணப்படவில்லை என்று தெரிவித்துள்ளனர். (ச-05)

# படுகொலைகள் நிறுத்தப்படும் வரை...

சமாதானத்திலும் பேச்சுவார்த்தையிலும் ராஜபக்ஷவின் அரசாங்கம் உண்மையான பற்றுறுதி கொண்டிருந்தால்பழைய நடை முறையை கையாண்டு நல்லெண்ண அடிப்படையில் தமிழீழ விடுதலைப்புலிகளின் உயர் தளபதிகளின் போக்குவரத்திற்குவான்படை உலங்கு வானூர்திகளை வழங்கியிருக்க வேண்டும்.

எனினும் அரசின் கடும்போக்கையும் பகமையுணர்வையும் வெளிப்படுத்தும் வகையில் திடீரென உலங்குவானூர்தி ஏற்பாடு மீளப் பெறப்பட்டமை, ஜெனீவாப் பேச்சுக்கள் இழுபறிநிலையை அடைந்து முடக்கம் கண்டமைக்கு காரணம் என்றும் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் சுட்டிக்காட்டியுள்ளார்.

போக்குவரத்துச் சர்ச்சையால் ஏற்பட்ட முடக்க நிலை தற்போது புதிதாக எழுந்துள்ள ஆபத்தான சூழலால் மேலும் மோசமடைந்திருப்பதோடு தங்கு தடையின்றி தமிழ்ப் பொதுமக்கள் மீது அரச படைகளும் துணைப் படைக்குழுக்களும் கட்டவிழ்த்து விட்டுள்ள வன்முறைகள் சமாதான முன்னெடுப்புக்கள் தடைப்படுவதற்கு வழிகோலியிருப்பதாகவும் தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆலோசகர் குற்றம் சுமத்தியுள்ளார்.

லெப்.ஜெனரல் சரத்பொன்சேகா மீதான கொலை முயற்சிக்கு பழிதீர்க்கும் நோக்கத்துடன் திருமலை, சம்பூர் தமிழ்க்கிராமங்கள் மீது ஆகாய -கடல்வழித்தாக்குதல்களை மேற்கொள்வதற்கு தீர்மானித்ததன் மூலம் அரசாங்கம் பாரதூரமான தவறிழைத்துள்ளது.

அரசாங்கம் தெரிவித்தமை போன்று தமிழீழ விடுதலைப்புலிகளை நேரடியாக இலக்கு வைத்து மட்டுப்படுத்தப்படுத்தப்பட்ட தாக்குதல்கள் மேற்கொள்ளப்படவில்லை.

மாறாக கண்மூடித்தனமாகவும் வேறுபாடின்றியும் தமிழ்க்கரையோரக்கிராமங்கள் மீது குண்டுவீச்சுக்கள் மேற்கொள்ளப்பட்டு படுமோசமான அழிவுகளும் ஆயிரக்கணக்கான மக்களின் இடப்பெயர்வும் சம்பவித்தன.

எந்தக்காரணத்தைக் காட்டியும் நியாயப்படுத்த முடியாத வகையில் பொதுமக்கள் மீது அரச பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டது.

கொழும்பில் இடம்பெற்ற குண்டு வெடிப்பின் பின்னணியில் விடுதலைப்புலிகள் இருப்பதாக ஏற்பட்ட சந்தேகத்திற்காக தமிழ் மக்கள் மோசமான முறையில் கூட்டாகத் தண்டிக்கப்படுவது எந்த வகையில் நியாயமானது என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

தற்போது தமிழீழ தாயகத்தின் நிலைவரம் மிகவும் ஆபத்தான நிலையை எய்துள்ளது. சுழற்சி முறையில் இடம்பெறும் வன்முறைகளும் பதில் வன்முறைகளும் தாழ்நிலை - மறைமுக யுத்த வடிவத்தை எடுத்துள்ளது.

இந்த மோசமான யுத்தத்தின் பின்னணியில் படைகளாலும் துணைப்படைக்குழுக்களாலும் அப்பாவித் தமிழ்ப் பொதுமக்கள் படுகொலை செய்யப்படும் அவல நிலை காணப்படுகின்றது.

கடந்த ஏப்ரல் மாதம் 100 அதிகமான தமிழ்ப்பொதுமக்கள் கொடூரமான முறையில் கொன்றொழிக்கப்பட்டுள்ளனர்.

வகைதொகை இன்றி நீதிக்குப்புறம்பான முறையில் இடம்பெறும் தமிழ்ப்பொதுமக்களின் படுகொலைகளுடன் துணைப்படைக் குழுக்கள் மட்டுமன்றி சிறிலங்காப் படைகளும் தொடர்பு பட்டுள்ளன.

தமிழீழ தாயகத்தில் இவ்வாறான படுகொலைகள் நாளாந்தம் இடம்பெற்ற வண்ணமுள்ளன. நீதிக்குப் புறம்பான வகையில் அரசாங்க பாதுகாப்புப்படைகளால் அப்பாவி பொதுமக்கள் படுகொலை செய்யப்படுவதை, அவதானிப்புக்களையும் விசாரணைகளையும் அடிப்படையாகக் கொண்டு வழமைக்கு அப்பால்பட்ட முறையில் அறிக்கையொன்றைவெளியிட்டு கண்காணிப்புக்குழு உறுதி செய்தது.

எனினும் அரசாங்கத்தின் கடுமையான அழுத்தம் காரணமாக இந் நிலைப்பாட்டை மீளப்பெறுவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்ட கண்காணிப்புக் குழு அதன் நடுநிலையையும் நம்பகத்தன்மையையும் கேள்விக்குள்ளாக்கும் வகையில் குழப்பகரமான விளக்க அறிக்கையொன்றையும் வெளியிட்டது.

ஜெனிவாவில் வாக்குறுதி அளிக்கப்பட்டமைக்கமைய ஆயுதக்குழுக்களை கட்டுப்படுத்துவதற்கு சிறிலங்கா அரசாங்கம் மறுத்தமை வன்முறைகள் தீவிரமடைந்து பேச்சுவார்த்தைகள் செயலிழக்கும் சூழலுக்கு முதன்மைக்காரணியாக அமைந்தது.

அரசாங்க கட்டுப்பாட்டுப் பகுதிகளில் கருணா குழு இயங்குவதை திட்டவட்டமாக மறுதலித்து அதன் ஆயுததாரிகளை சிறிலங்கா அரசாங்கம் நிராயுதபாணிகளாக்கத் தவறியமை, கருணாவின் ஆயுததாரிகளை செயலிழக்க வைக்கும் பணியை தமிழீழ விடுதலைப்புலிகள் கையேற்கவேண்டிய நிலைக்கு வழிகோலியது.

இதன் வெளிப்பாடாகவே அண்மையில் வெலிகந்தையில் கருணா குழுவின் மூன்று முகாம்கள் தமிழீழவிடுதலைப்புலிகளின் சிறப்பு அதிரடிப்படைப் போராளிகளால் தகர்த்தழிக்கப்பட்டு 30 ஆயுததாரிகள் கொல்லப்பட்ட சம்பவம் அமைந்தது.

இவ்வாறு குறிப்பிட்டிருக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தற்போது ஏற்பட்டுள்ள வேதனைக்குரிய அவல நிலைக்கு அதிபர் ராஜபக்ஷவின் அரசாங்கமே மூலகாரணம் என சுட்டிக்காட்டியுள்ளார்.

பாதுகாப்புப் படைகளின் வெறியாட்டங்களை முடிவுக்குக் கொண்டு வந்து படையினரின் பின்புல ஆதரவுடன் இயங்கும் துணைப்படைக்குழுக்களை கட்டுப்படுத்தி சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு உகந்த சூழலை தோற்றுவிக்கும் பொறுப்பு அரசுக்கு உரித்தானது என்பது தமிழீழ விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு என்றும் கலாநிதி அன்ரன்பாலசிங்கம் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ச-05)

சத்தியராஜ், ரோஜா நடித்த
எங்கிருந்தோ வந்தான்
சங்கானை கா.நே: 10.30, 2.15, 5.30, 8.45

04.05.2006 முதல்
10.30,2.30,6.30,9.30
மாமனிதக் குரங்கொன்றின் நெஞ்சை உருக்கும் கதை கொண்ட சாகசச் சித்திரம்
பீட்டர் ஜக்ஷன்
கிங்கொங்
(KING KONG)
தங்கத்தமிழ் மொழியில். பாடசாலை மாணவர்களுக்கு விசேட சலுகை

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பீறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில 09.05.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.